கின்ற வகையில் பிரித்துக் கொடுத்து விடுவது நலமாக இருக்கும். இல்லை என்றால் இன்னும் எத்தனை ஆண்டுகளுக்குக் கோர்ட்டுக்குப் போய்க் கொண்டிருக்க வேண்டுமென்று சொல்ல முடியாது. ஆகவே, இந்தக் கருத்தை வலியுறுத்தி மத்திய அரசு போக்குவரத்துத் துறை அமைச்சருக்கும் தெரிவித்திருக்கிறோம். மத்திய அரசின் போக்குவரத்துத் துறை அமைச்சர் பதிலளிக்கையில், தமிழ்நாடு சட்டமன்றம் நிறைவேற்றியுள்ள பஸ் தேசியமய சட்டம் சுப்ரீம் கோர்ட்டில் இருக்கிறதென்றும், தீர்ப்பு தெரிந்தவுடன் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கலாமென்றும் தெரிவித்துள்ளார்.

திரு. கோவை செழியன் : ஆளும் கட்சி உறுப்பினர் மாண்புமிகு வீராசாமி அவர்கள் அமைச்சர் அவர்கள் தன்னுடைய கொள்கையினை நிறைவேற்ற முடியாமல் விரக்தியுற்றிருப்பதாகச் சொன்னார்கள். அமைச்சர் அவர்கள் விரக்தி நிலையில் இருக்கிறாரா என்பதற்கு விளக்கம் தேவை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரத்தில் இது போன்ற விளக்கங்கள் எல்லாம் கேட்கக்கூடாது.

சேலம்-கொடுமுடி பேருந்து வழித்தடம்

*608 வினா—திரு. வ. முத்து : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சேலத்திலிருந்து மல்லசமுத்திரம், வேலக்கவுண்டம்பட்டி வழியாக கொடுமுடி செல்லும் வழித்தடங்களில் அண்ணா போக்குவரத்துக் கழகத்தின் சார்பாக பஸ் விடுகிற உத்தேசம் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இல்லை.

திரு. வ. முத்து : இந்தப் பகுதி அதிகக் கிராமங்கள் இருக்கும் பகுதி. ஆகவே, அங்கு பஸ் விட அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அண்ணா போக்குவரத்துக் கழகத்தின் மூலம் விடுவதற்கான செயற்குறிப்பு இல்லை. இருந்தாலும் போக்குவரத்துத் துறையின் மூலம் அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

திரு. தி. பொன்னுமலை : சேலம் மாவட்டத்திலே டவுன் பஸ்கள் மிகவும் குறைவாக இருக்கின்றன. ஒவ்வொரு வழித் தடத்திலும் பொதுமக்கள் ஏராளமாக நின்று காத்துக் கொண்டிருக்கிறார்கள். சேலத்திலிருந்து வள்ளியூர் ; சேலத்திலிருந்து காரிப்பட்டி, சேலத்திலிருந்து பொன்னமராவதிப்பட்டி, சேலத்திலிருந்து ஆட்டையாம்பட்டி, சேலத்திலிருந்து மேலூர் வரை போவதற்கு டவுன் பஸ்ஸுக்கு மக்கள் காத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, ஆங்காங்கு போதுமான டவுன் பஸ் விட அரசு ஆவன செய்யுமா ?

1974 மார்ச் 25]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதைப் பற்றி எழுதியும் கொடுத்திருக்கிறார்கள். அது சம்பந்தமாக சேலம் போக்குவரத்துத் துறை அதிகாரிக்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று தாக்கீது அனுப்பப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண்கள் 609, 610 ஆகியவை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்தி வைக்கப் படுகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. ஒத்திவைப்புத் தீர்மானம்

எண்ணூர் அனல் மின்நிலையக் கொதிகலன்களில் லீக்கேஜும் அதன் விளைவாக ஏற்பட்டுள்ள மின் உற்பத்திக் குறைவும் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் ஹாண்டே அவர்கள் The serious situation arising out of the boiler leak in the Ennore Thermal Plant and consequent reduction in electricity production என்ற பொருள் குறித்து விவாதிக்க ஓர் ஒத்தி வைப்புத் கொடுத்திருக்கிறார்கள். இது எப்படி அவையின் மற்ற நடவடிக்கைகளை ஒத்தி வைத்து விவாதிக்கும் அளவிற்கு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைப்பற்றி மட்டும் விளக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

DR. H. V. HANDE: Sir, I have given notice—"that this House stands adjourned to discuss a matter of urgent public importance, viz., the boiler leak in the Ennore Thermal Power plant and consequent reduction in the electricity production."

Sir, I personally feel and I am quite sure that the House will agree with me that this is a serious matter actually involving the very production of electricity. I am afraid for the past few months and for the past few years the production of electricity in Ennore has been steadily going down on account of various maladies and malaises that have beset this plant in Ennore.